www.agaram.lk

OL/2015/60-T-I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

33620

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**60 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2015**

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
Business and Accounting Studies I, II

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**

(i) **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான அல்லது மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (×) இடுக.**

(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

● பின்வரும் சம்பவத்தை அவதானித்து **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கிராமப்புறமொன்றில் வசிக்கும் கருணாரதி என்பவர் ஓர் இல்லத்தரசி ஆவார். இவர் விவசாய நடவடிக்கைகள், மரக்கறிப் பயிர்ச்செய்கை என்பவற்றைத் தனது தோட்டத்தில் செய்யும் அனுபவமுடையவர் என்பதுடன் தனது குடும்ப உறுப்பினர்களுக்குப் புத்தம்புதிய மரக்கறிகளையும் வழங்கி வருகின்றார். கருணாரதியின் மகள் சாமந்தி, கெக்கரிக்காய் (cucumber) ஐயும் தக்காளியையும் அதிகம் விரும்புகின்றார். கருணாரதி தனது குடும்ப நுகர்வுக்குப் போதுமான அளவு மரக்கறி வகைகளை வைத்துக் கொள்வதுடன் மேலதிக மரக்கறிகளை அண்மையிலுள்ள வாராந்தச் சந்தையின் வியாபாரிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் இலாபம் உழைக்கின்றார்.

**1.** இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள தேவை மற்றும் அதற்கான விருப்பத்தை முறையே கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) தக்காளி - உணவு
(2) உணவு - கெக்கரிக்காய்
(3) உணவு - சுகாதாரம்
(4) கெக்கரிக்காய் - தக்காளி

**2.** மேலுள்ள சம்பவம் தொடர்பான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) கருணாரதி நேர் உற்பத்தியில் மட்டும் ஈடுபட்டுள்ளார்.
(2) கருணாரதி நேரில் உற்பத்தியில் மட்டும் ஈடுபட்டுள்ளார்.
(3) கருணாரதி நேர் மற்றும் நேரில் உற்பத்திகளில் ஈடுபட்டுள்ளார்.
(4) சாமந்தி நேரில் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளார்.

**3.** இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள கருணாரதியின் வணிகத்தின் ஒரு வாய்ப்பு
(1) விவசாய நடவடிக்கைகள் மீதான கருணாரதியின் அனுபவம்
(2) கருணாரதி ஓர் இல்லத்தரசியாக இருப்பது
(3) கருணாரதி ஒரு பெரிய தோட்டத்தைக் கொண்டிருப்பது
(4) வாராந்தச் சந்தையொன்று கருணாரதியின் வீட்டுக்கு அண்மையில் காணப்படுவது

**4.** இச்சம்பவத்தில் வாராந்தச் சந்தையானது,
(1) பொதுத்துறையில் ஒரு மூன்றாம்நிலை உற்பத்தி வணிகமாகும்.
(2) பொதுத்துறையில் ஒரு முதனிலை உற்பத்தி வணிகமாகும்.
(3) தனியார்துறையில் ஒரு முதனிலை உற்பத்தி வணிகமாகும்.
(4) தனியார்துறையில் ஒரு இரண்டாம்நிலை உற்பத்தி வணிகமாகும்.

**5.** இச்சம்பவத்தின் உற்பத்திப்பொருள் விநியோகச் செயன்முறையைச் சரியாக எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) [கருணாரதி] → [நுகர்வோர்]
(2) [வாராந்தச் சந்தை விற்பனையாளர்] → [நுகர்வோர்]
(3) [கருணாரதி] → [வாராந்தச் சந்தை விற்பனையாளர்] → [நுகர்வோர்]
(4) [வாராந்தச் சந்தை விற்பனையாளர்] → [சில்லறை வியாபாரி] → [நுகர்வோர்]

**6.** "முதியோர் கொண்டாடுவதற்கான ஒரு விசேட தினத்தைப் பிரகடனப்படுத்தல்" என்ற கூற்றின் மூலம் எடுத்துக் காட்டப்படும் வணிகச்சூழல் எது ?
(1) பொருளாதாரச் சூழல்
(2) அரசியற் சூழல்
(3) சமூக கலாசாரச் சூழல்
(4) தொழினுட்பச் சூழல்

[பக். 2 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



**7.** சஞ்சீவ திசாநாயக்கவும் தம்மிக்க திசாநாயக்கவும் "திசாநாயக்க சகோதரர்கள்" என்ற பெயரில் ஒரு சில்லறை வணிகத்தை ஆரம்பிக்க உத்தேசித்துள்ளனர். பின்வருவனவற்றுள் இருந்து இவ்வணிகம் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.

(1) இது ஒரு தனியுடைமை வணிகமாகும்.
(2) இவ்வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதாகும்.
(3) இவ்வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வது கட்டாயமானதல்ல.
(4) வணிகத்தின் பெயரைப் பதிவுசெய்வதன் மூலம் இவ்வணிகம் சட்ட ஆளுமையைப் பெற்றுக் கொள்ளலாம்.

**8.** பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகத் திட்டம் ஒன்றில் உள்ளடங்கியுள்ள கூறுகளும் Y நிரலில் ஒவ்வொரு கூறிலும் அடங்கியுள்ள உருப்படிகளும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. சந்தைப்படுத்தல் திட்டம் | A - எதிர்பார்க்கப்பட்ட பயிற்சி செலவுகள் |
| 2. செயற்பாட்டுத் திட்டம் | B - எதிர்பார்க்கப்பட்ட விளம்பரப்படுத்தற் செலவுகள் |
| 3. மனித வளத் திட்டம் | C - எதிர்பார்க்கப்பட்ட மூலதனம் |
| 4. நிதித் திட்டம் | D - எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி அலகுகள் |

X நிரலிலுள்ள வணிகத் திட்டத்தின் கூறுகளுக்குப் பொருந்தத்தக்கதாக Y நிரலில் காணப்படும் உருப்படிகளின் சரியான ஒழுங்குமுறையை எடுத்துக்காட்டும் விடை

(1) A, B, C, D (2) B, C, A, D (3) B, D, A, C (4) B, D, C, A

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **9** ஆம், **10** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

பின்வருவன பாடசாலைப் பைகளைத் தயாரித்தல் மற்றும் விற்பனை செய்தல் தொடர்பான ஒரு வணிகத்தின் 2016 ஜனவரி மாதத்திற்கான மதிப்பிடப்பட்ட செலவுகள் ஆகும்.

| | |
|---|---|
| ※ மொத்த உற்பத்திக் கிரயம் | ரூ. 120 000 |
| ※ நேர் ஊழியக் கிரயம் | ரூ. 20 000 |
| ※ ஏனைய நேர்ச் செலவுகள் | ரூ. 10 000 |
| ※ நேர் மூலப்பொருட் கிரயம் | ரூ. 60 000 |


**9.** இவ்வணிகத்தின் எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி மேந்தலைக் கிரயங்கள்

(1) ரூ. 30 000 (2) ரூ. 60 000 (3) ரூ. 90 000 (4) ரூ. 210 000

**10.** ஜனவரி மாதத்தில் 200 பாடசாலைப் பைகள் தயாரிக்க எதிர்பார்க்கப்படின், ஒரு பாடசாலைப் பையின் எதிர்பார்க்கப்படும் கிரயம்

(1) ரூ. 150 (2) ரூ. 300 (3) ரூ. 450 (4) ரூ. 600

● இலக்கங்கள் இடப்பட்ட ஒரு காசோலையும், காசோலையொன்று தொடர்பான சில பதங்களும் கீழே தரப்பட்டுள்ளன. இத்தகவல்களைப் பயன்படுத்தி **11** ஆம், **12** ஆம் வினாக்களுக்கு விடை தருக.




A – தொகை சொற்களில் B – திகதி
C – பணம் பெறுபவரின் பெயர் D – வங்கிக் கிளைக் குறியீடு
E – கணக்கு வைத்திருப்பவர் பெயர் F – கணக்கு இலக்கம்

**11.** மேலுள்ள காசோலையில் முறையே ①, ②, ③, ④ ஆம் இலக்கங்களுக்குரிய சரியான பதங்களைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) C, A, B, D (2) C, A, B, F (3) E, A, B, D (4) E, A, B, F

[பக். 3 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



**12.** மேலே தரப்பட்ட காசோலையில் இலக்கம் ⑤ தொடர்பில் **தவறான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இது காசோலையின் அடியிதழ் (அடிக்கட்டை) ஆகும்.
(2) இது மேலுள்ள B, C ஆகியவற்றை உள்ளடக்கும்.
(3) 015129 என்பது காசோலையின் இலக்கமாகும்.
(4) காசோலையை வங்கியில் வைப்பிலிடும்போது இதனை ஒரு மூல ஆவணமாகப் பயன்படுத்தலாம்.

**13.** அரசகுமாரி என்பவர் புடைவை வியாபாரமொன்றை செய்கின்றார். இவர் துணிகளைக் கொள்வனவு செய்தமைக்காக தனுஷ் என்பவருக்கு ரூ. 100 000 பெறுமதியான காசோலையை வழங்கினார். அரசகுமாரி இக்கொடுக்கல்வாங்கலைச் செய்வதற்கு
(1) தேசிய சேமிப்பு வங்கியில் சேமிப்புக் கணக்கைக் கொண்டிருக்க வேண்டும்.
(2) தேசிய சேமிப்பு வங்கியில் நடைமுறைக் கணக்கைக் கொண்டிருக்க வேண்டும்.
(3) மக்கள் வங்கியில் நடைமுறைக் கணக்கைக் கொண்டிருக்க வேண்டும்.
(4) மக்கள் வங்கியில் சேமிப்புக் கணக்கைக் கொண்டிருக்க வேண்டும்.

**14.** வரவு அட்டை தொடர்பில் பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வரவு அட்டையானது கடன் அடிப்படையில் வழங்கப்படும்.
(2) வரவு அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு வங்கிக் கணக்கு தேவையற்றதாகும்.
(3) வரவு அட்டைகள் மீது கொடுப்பனவுகளுக்காக வட்டி அறவிடப்படும்.
(4) வாடிக்கையாளரின் வைப்புப் பெறுமதியின் மீது வரவு அட்டை வழங்கப்படும்.

**15.** அருணன் என்பவர் தனது வணிக நடவடிக்கையில் பயன்படுத்தும் லொறியை தனது பெயரில் காப்புறுதி செய்வதற்காக காப்புறுதிக் கம்பனி ஒன்றிற்கு விண்ணப்பம் செய்திருந்தார். எனினும் இந்த லொறியானது அவரது தந்தைக்குச் சொந்தமானதாக இருந்தது. இவ்விண்ணப்பத்தைக் காப்புறுதிக் கம்பனி நிராகரித்தது. இதற்குக் காரணமாகவிருந்த காப்புறுதித் தத்துவம்
(1) காப்புறுதி செய்தகு நலன் ஆகும்.
(2) இழப்பீட்டுத் தத்துவமாகும்.
(3) மிக்குயர் நம்பிக்கை ஆகும்.
(4) பதிலாள் வைப்புத் தத்துவம் ஆகும்.

**16.** மிகவும் உயர்ந்த எரிபொருள் வினைத்திறனுடைய வாகனமென்ற வகையில் கலப்பு இன (Hybrid) மோட்டார் வாகனங்களுக்கு மிகவும் கூடுதலான கேள்வி தற்போது காணப்படுகின்றது. இக்கூற்றில் உள்ளடங்கியுள்ள போக்குவரத்துக் கூறுகள் எவை ?
(1) பாதையும் ஊடகமும் ஆகும்.
(2) ஊடகமும் வலுவும் (சக்தியும்) ஆகும்.
(3) வலுவும் தரிப்பிடமும் ஆகும்.
(4) பாதையும் தரிப்பிடமும் ஆகும்.

**17.** தொடர்பாடற் செயன்முறையின் கூறுகள் கீழே தரப்படுகின்றன.

A – ஊடகம்　　B – பெறுபவர்
C – பின்னூட்டல்　　D – செய்தி
E – அனுப்புபவர்　　F – துலங்கல்

தொடர்பாடற் செயன்முறைக் கூறுகளைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) E, D, A, B, C, F　(2) E, D, A, B, F, C　(3) E, A, D, B, F, C　(4) E, D, A, F, B, C

**18.** பின்வரும் சம்பவங்களில் வெளிவாரி, வாய்மொழி மற்றும் இலத்திரனியல் மூலமான தொடர்பாடல் எதுவெனில்,
(1) விளையாட்டுப்போட்டி தொடர்பாக அருகிலுள்ள பாடசாலைகளுக்கு அழைப்பிதழ் அனுப்புதல்
(2) மாணவர் முன்னேற்ற அறிக்கையை அவர்களது பெற்றோருக்குக் கையளித்தல்
(3) சுகயீனமடைந்த மாணவர் சம்பந்தமாக அதிபரால் தொலைபேசி மூலம் பெற்றோருக்குத் தகவல் வழங்கப்படுதல்
(4) அதிபர் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி பாடசாலைக் கூட்டத்தில் பேசுதல்

**19.** ரூபன் என்பவர் கம்பனியொன்றில் ஒவ்வொன்றும் ரூ. 50 வீதம் வாங்கிய 1 000 சாதாரண பங்குகளை ஒரு மாதத்தின் பின்னர் ஒவ்வொன்றையும் ரூ. 70 வீதம் விற்பனை செய்தார். இக்கொடுக்கல்வாங்கல் மூலம் அவர் பெற்றுக்கொண்ட திரும்பல்
(1) வட்டி வருமானம் ரூ. 20 000 ஆகும்.
(2) பங்கிலாம் ரூ. 20 000 ஆகும்.
(3) மூலதன ஆதாயம் ரூ. 20 000 ஆகும்.
(4) மூலதன ஆதாயம் ரூ. 70 000 ஆகும்.

**20.** கம்பனி ஒன்றின் சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதனை சேமிப்பு வைப்புகளில் முதலீடு செய்வதுடன் தொடர்புபடுத்தின் அது ---①--- இடரையும் ---②--- திரும்பலையும் கொண்டதாகக் காணப்படும்.

மேலே தரப்பட்ட கூற்றில் உள்ள ①, ② ஆகியவற்றுக்கு மிகவும் பொருத்தமான சொற்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) உயர்ந்த, உயர்ந்த
(2) உயர்ந்த, தாழ்ந்த
(3) தாழ்ந்த, உயர்ந்த
(4) தாழ்ந்த, தாழ்ந்த

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

[பக். 4 ஐப் பார்க்க

www.agaram.lk



33620

**21.** காசாகச் செலுத்திய வியாபார நிறுவனமொன்றின் வாடகை ரூ. 8 000 தொடர்பில் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் மீது ஏற்படும் தாக்கத்தை சரியான முறையில் எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

| | சொத்துகள் | = | உடைமையாளர் உரிமை | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| (1) | + 8 000 | = | + 8 000 | | – |
| (2) | – 8 000 | = | – 8 000 | | – |
| (3) | – | = | + 8 000 | | – 8 000 |
| (4) | – | = | – 8 000 | | + 8 000 |

**22.** பேரேட்டில் கடன்பட்டோர் கணக்கு ----①---- இருக்கின்றபோது பெற்ற கழிவுக் கணக்கு ----②---- காணப்படுகின்றது.

மேலே தரப்பட்ட ①, ② ஆகியவற்றுக்கு மிகவும் பொருத்தமான சொற்களைச் சரியான ஒழுங்குமுறையில் எடுத்துக்காட்டும் விடை
(1) ஒரு பொறுப்புக் கணக்காக, ஒரு வருமானக் கணக்காக
(2) ஒரு பொறுப்புக் கணக்காக, ஒரு செலவினக் கணக்காக
(3) ஒரு சொத்துக் கணக்காக, ஒரு வருமானக் கணக்காக
(4) ஒரு சொத்துக் கணக்காக, ஒரு செவினக் கணக்காக

**23.** பின்வருவன வணிகமொன்றின் பேரேட்டில் இருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கணக்காகும்.

..................... கணக்கு

| திகதி | விபரம் | பே.ப | தொகை ரூ. | திகதி | விவரம் | பே.ப | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|
| 01/15 | காசுக் கணக்கு | | 6 000 | 01/01 | மீதி | | 5 000 |
| | பெற்ற கழிவு | | 600 | 01/10 | கொள்வனவுக் கணக்கு | | 10 000 |
| 01/31 | மீதி கீ/கொ/செ | | 8 400 | | | | |
| | | | 15 000 | | | | 15 000 |
| | | | | 02/01 | மீதி மு/கொ/வ | | 8 400 |

இக்கணக்கின் பெயரையும் இக்கணக்கு உரித்தாகும் கணக்கு வகையையும் ஒழுங்குமுறையில் கொண்டமைந்த விடையைத் தெரிவுசெய்க.
(1) கடன்கொடுத்தோர் கணக்கு, பொறுப்புக் கணக்கு
(2) கடன்பட்டோர் கணக்கு, பொறுப்புக் கணக்கு
(3) காசுக் கணக்கு, சொத்துக் கணக்கு
(4) கடன்பட்டோர் கணக்கு, சொத்துக் கணக்கு

**24.** பின்வரும் அட்டவணையில் X நிரலில் வணிகமொன்றில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்களும் Y நிரலில் முதன்மை ஏடுகளில் இக்கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. பிரசன்னாவிடமிருந்து விற்பனைத் திருப்பம் ரூ. 3 000 ஆகும். | A – வரவுத்தாள் |
| 2. கீர்த்திக்குச் செய்த கொள்வனவுத் திருப்பம் ரூ. 5 000 ஆகும். | B – பற்றுச்சீட்டு |
| 3. கடனுக்கு வாங்கிய இயந்திரம் ரூ. 50 000 ஆகும். | C – செலவுத்தாள் |
| 4. கடன்பட்டோரிடமிருந்து பெற்ற காசு ரூ. 10 000 ஆகும். | D – நாட்குறிப்பு உறுதிச்சீட்டு |

X நிரலில் உள்ள கொடுக்கல்வாங்கல்களுக்குப் பொருந்தத்தக்கதாக Y நிரலில் உள்ள மூல ஆவணங்களின் சரியான ஒழுங்கு முறையை எடுத்துக்காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C, B, D (2) C, A, B, D (3) C, A, D, B (4) C, B, A, D

**25.** ரூ. 800 ஆல் வணிகமொன்றின் கொடுத்த கழிவு அதிகரிப்பதற்குக் காரணமாகும் கொடுக்கல்வாங்கலைத் தெரிவுசெய்க.
(1) கடன்கொடுத்தோரான ஜானகிக்கு செலுத்த வேண்டிய ரூ. 8 000, 10% கழிவில் செலுத்தப்பட்டது.
(2) ரூ. 4 000 குறிக்கப்பட்ட பொருளொன்று ரூ. 3 200 இற்கு காசுக்கு விற்பனை செய்யப்பட்டது.
(3) ரூ. 1 000 தரவேண்டிய கடன்பட்டோரான ரூபனிடமிருந்து ரூ. 800 பெறப்பட்டது.
(4) ரூ. 8 000 தரவேண்டிய கடன்பட்டோரான கபிலனிடமிருந்து 10% கழிவில் காசு பெறப்பட்டது.

**26.** பின்வருவனவற்றுள் முதன்மை ஏடுகள் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) வணிகமொன்றின் சகல கடன் கொள்வனவுகளும் கொள்வனவு நாளேட்டில் பதிவுசெய்யப்படும்.
(2) விற்பனைத் திரும்பல் நாளேட்டில் கொடுக்கல்வாங்கல்களைப் பதிவுசெய்வதற்குப் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் வரவுத்தாள் ஆகும்.
(3) நிறுவனப் பயன்பாட்டிற்காக கடனுக்கு மேற்கொள்ளப்பட்ட இயந்திரக் கொள்வனவானது பொது நாட்குறிப்பில் பதிவுசெய்யப்படும்.
(4) கொடுக்கல்வாங்கல் ஒன்றைப் பதிவுசெய்வதற்கு விசேட முதன்மை ஏடு ஒன்று இல்லாதவிடத்து அது காசேட்டில் பதிவுசெய்யப்படும்.

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

[பக். 5 ஐப் பார்க்க

www.agaram.lk



**27.** வணிகமொன்றின் சில்லறைக் காசேடு தொடர்பாக சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

* 01.01.2015 இல் சில்லறைக் காசாளரிடம் இருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 200
* 01.01.2015 இல் மீள் நிரப்பப்பட்ட சில்லறைக் காசு வசக்கட்டு ரூ. 1 800
* 31.01.2015 இல் சில்லறைக் காசாளரிடமிருந்த சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 300

வணிகத்தின் சில்லறைக் காசு வசக்கட்டு தொகையையும் ஜனவரி மாதத்தின் சில்லறைக் காசேட்டு செலவினங்களையும் முறையே சரியாக எடுத்துக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) ரூ. 2 000, ரூ. 1 500 (2) ரூ. 1 800, ரூ. 1 500
(3) ரூ. 1 800, ரூ. 1 700 (4) ரூ. 2 000, ரூ. 1 700

**28.** வங்கிக்கூற்றின் வரவுப்பக்கத்தில் காணப்படும் ஓர் உருப்படி

(1) கடன்பட்டோர் பணம் அனுப்புதல்கள் (2) காசு வைப்புகள்
(3) காசோலை வைப்புகள் (4) வங்கி அறவீடுகள்

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **29** ஆம், **30** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

வணிகமொன்றில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கலும் அதனைப் பதிவதற்குப் பயன்படுத்தப்பட்ட இரட்டைப் பதிவும் கீழே தரப்படுகின்றன.

கொடுக்கல்வாங்கல்: அலுவலக உபகரணங்களின் கொள்வனவு காசுக்கு ரூ. 50 000 ஆகும்.

இரட்டைப்பதிவு: அலுவலகச் செலவுகள் கணக்கு வரவு ரூ. 50 000
காசுக் கணக்கு செலவு ரூ. 50 000

**29.** மேலே தரப்பட்ட கொடுக்கல்வாங்கலைப் பதிவுசெய்வதில் நிகழ்ந்த கணக்கீட்டு வழு யாது ?

(1) இழைக்கப்பட்ட வழு (2) விடுபடல் வழு (3) கோட்பாட்டு வழு (4) ஈடுசெய்யும் வழு

**30.** மேலுள்ள வழுவைத் திருத்துவதற்கான நாட்குறிப்புப் பதிவு யாது ?

(1) அலுவலக உபகரணக் கணக்கு வரவு ரூ. 50 000
காசுக் கணக்கு செலவு ரூ. 50 000
(2) அலுவலக உபகரணக் கணக்கு வரவு ரூ. 50 000
அலுவலக செலவினங்கள் கணக்கு செலவு ரூ. 50 000
(3) தொங்கற் கணக்கு வரவு ரூ. 50 000
அலுவலக செலவினங்கள் கணக்கு செலவு ரூ. 50 000
(4) அலுவலக உபகரணக் கணக்கு வரவு ரூ. 50 000
தொங்கற் கணக்கு செலவு ரூ. 50 000

**31.** வணிகமொன்றினால் 01.01.2013 இல் இயந்திரமொன்று ரூ. 100 000 இற்கு வாங்கப்பட்டது. இதன் பயன்தரு ஆயுட்காலம் 05 வருடங்களாகக் காணப்பட்டதுடன் இவ் ஆயுட்கால முடிவில் இதன் எஞ்சிய பெறுமதி ரூ. 10 000 ஆகக் காணப்படும். 31.12.2014 இல் இயந்திரப் பெறுமானத்தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு மீதி

(1) ரூ. 18 000 (2) ரூ. 20 000 (3) ரூ. 36 000 (4) ரூ. 40 000

**32.** சுமுது வணிகமானது 01.01.2014 இல் ரூ. 200 000 ஐ வருடாந்தம் 15% வட்டியிலான நிலையான வைப்பில் முதலீடு செய்தது. 2014 ஆம் ஆண்டில் ரூ. 20 000 காசாக முதலீட்டு வருமானம் பெற்றுக்கொள்ளப்பட்டது. 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தயாரிக்கப்படும் இவ்வணிகத்தின் இலாபநட்டக் கணக்கில் முதலீட்டு வருமானமாக இருக்கும் தொகை யாது ?

(1) ரூ. 10 000 (2) ரூ. 20 000 (3) ரூ. 30 000 (4) ரூ. 220 000

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **33** ஆம், **34** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

2014 ஆம் ஆண்டில் எக்சத் விளையாட்டுக் கழகத்தில் இருந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை 120 ஆகும். ஓர் அங்கத்தவருக்கான மாதாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 50 ஆகும். 2014 ஆம் ஆண்டின்போது 100 அங்கத்தவர்கள் வருடாந்த அங்கத்துவக் கட்டணத்தைச் செலுத்தியுள்ளார்கள்.

**33.** 31.12.2014 இல் உள்ளவாறு பெற்றுக்கொள்ள வேண்டிய அங்கத்துவக் கட்டணம் எவ்வளவு ?

(1) ரூ. 1 000 (2) ரூ. 6 000 (3) ரூ. 12 000 (4) ரூ. 60 000

**34.** 2014 ஆம் ஆண்டிற்கான இவ் விளையாட்டு கழகத்தின் வருடாந்த அங்கத்துவக் கட்டண வருமானம் எவ்வளவு ?

(1) ரூ. 6 000 (2) ரூ. 12 000 (3) ரூ. 60 000 (4) ரூ. 72 000

[பக். 6 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



- பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

01.01.2014 இல் ஆரம்பிக்கப்பட்ட கல்ஹாரா வியாபாரத்தின் 31.12.2014 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| விற்பனைகள் | | 180 000 |
| கொள்வனவுகள் | 100 000 | |
| விற்பனைத் திருப்பங்கள் | 5 000 | |
| கொள்வனவுத் திருப்பங்கள் | | 9 000 |
| காணி | 450 000 | |
| கட்டட வாடகை | 24 000 | |
| விளம்பரம் | 15 000 | |
| மின்சாரச் செலவுகள் | 18 000 | |
| வங்கிக் கடன் 10% | | 50 000 |
| வங்கி வட்டி | 2 000 | |
| கடன்பட்டோர் | 20 000 | |
| கடன்கொடுத்தோர் | | 15 000 |
| கையிலுள்ள காசு | 30 000 | |
| வங்கி மேலதிகபற்று | | 10 000 |
| மூலதனம் | | 400 000 |
| | 664 000 | 664 000 |

மேலதிக தகவல்கள் :

1. 31.12.2014 இல் சரக்கிருப்பு ரூ. 30 000 ஆகும்.
2. 31.12.2014 இல் செலுத்த வேண்டிய மின்சாரச் செலவினங்கள் ரூ. 2 000 ஆகும்.

**35.** 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வணிகத்தின் விற்ற சரக்கின் கொள்விலை
(1) ரூ. 61 000 (2) ரூ. 70 000 (3) ரூ. 91 000 (4) ரூ. 100 000

**36.** 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வணிகத்தின் மொத்த இலாபம்
(1) ரூ. 84 000 (2) ரூ. 105 000 (3) ரூ. 114 000 (4) ரூ. 119 000

**37.** 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இவ்வணிகத்தின் இலாப நட்டக் கணக்கில் காணக்கூடிய ஒரு விற்பனை விநியோகச் செலவு
(1) விளம்பரப்படுத்தற் செலவினங்கள் ஆகும். (2) மின்சாரச் செலவினங்கள் ஆகும்.
(3) கட்டட வாடகை ஆகும். (4) வங்கி வட்டி ஆகும்.

**38.** 31.12.2014 இல் உள்ளவாறு இவ்வணிகத்தின் உடைமையாளரின் உரிமையின் பெறுமதி
(1) ரூ. 50 000 (2) ரூ. 350 000 (3) ரூ. 400 000 (4) ரூ. 450 000

**39.** 31.12.2014 இல் உள்ளவாறு இவ்வணிகத்தின் நடைமுறைப் பொறுப்புகளின் பெறுமதி
(1) ரூ. 20 000 (2) ரூ. 25 000 (3) ரூ. 27 000 (4) ரூ. 30 000

**40.** 31.12.2014 இல் உள்ளவாறு இவ்வணிகத்தின் ஐந்தொகையில் மொத்தச் சொத்துகளின் பெறுமதி
(1) ரூ. 80 000 (2) ரூ. 450 000 (3) ரூ. 500 000 (4) ரூ. 530 000

* *

[பக். 7 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

www.agaram.lk



සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**60 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2015 දෙසැම්බර්
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2015 டிசெம்பர்
General Certificate of Education (Ord. Level) Examination, December 2015

ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය I, II
**வணிகக் கல்வியும் கணக்கீடும் I, II**
Business and Accounting Studies I, II

## வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**முக்கியம் :** அறிவுறுத்தல்களுக்கமைய **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. மேலதிகமாக எழுதப்படும் விடைகள் பரீட்சார்த்தியினால் வெட்டிவிடப்படாத சந்தர்ப்பத்தில் பரீட்சகரினால் புள்ளிகள் வழங்கப்படாமல் வெட்டிவிடப்படும்.

* **முதலாம்** வினா உட்பட, பகுதி I இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி II இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
* விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.

அமரசிங்கம் என்பவர் 01.01.2015 இல் “அமரசுவை தயிர்” என்ற பெயரில் ரூ. 50 000 காசையும் ரூ. 500 000 பெறுமதியான லொறியையும் ஈடுபடுத்தி எம்பிலிபிட்டியவில் உள்ள தயிர் உற்பத்தியாளரான ரசிகன் என்பவரிடமிருந்து தயிரைக் கொள்வனவு செய்து கொழும்பிலுள்ள அரசாங்க நிறுவனங்களின் சிற்றுண்டிச்சாலைகளுக்கு விநியோகம் செய்யும் வணிகமொன்றை ஆரம்பித்தார். அன்றைய தினமே ரூ. 20 000 வைப்புச் செய்யப்பட்டு நடைமுறைக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தயிர்ச்சட்டிக் கொள்வனவுகள் தொடர்பான கொடுப்பனவானது மாத முடிவில் காசோலை மூலம் செலுத்தப்பட்டதுடன் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்களுக்குத் தயிர்ச்சட்டிகள் காசு அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டன.

2015 ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

* தயிர்ச்சட்டி ஒன்றின் கொள்வனவு விலை ரூ. 20 ஆகவும் விற்பனை விலை ரூ. 30 ஆகவும் காணப்பட்டது.
* கொள்வனவு செய்த தயிர்ச்சட்டிகள் – 20 000
* லொறிச் சாரதிக்குச் செலுத்திய கூலி ரூ. 25 000
* தயிர்ச்சட்டிகளை எடுத்துச் செல்வதற்கான கொள்கலன்களின் கொள்வனவிற்காக ரூ. 20 000 செலுத்தப்பட்டது.
* எரிபொருள் மற்றும் ஏனைய செலவுக்காக செலுத்தியது ரூ. 40 000 ஆகும்.
* லொறியானது வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
* மாத முடிவில் முடிவுச் சரக்கிருப்பு எதுவுமில்லை.
* மாதத்தில் வங்கி நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்ட தொகை ரூ. 500 000 ஆகும்.

பெப்ரவரி மாதத்திலிருந்து கொழும்பிலும் அதன் புறநகர்ப்பகுதிகளிலும் தயிர்ச்சட்டிகள் விநியோகிக்க எதிர்பார்க்கப்பட்டதுடன் தயிர்ச்சட்டிகளின் மாதத்திற்கான விற்பனை 5% ஆல் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. மேலும் இதற்காக புதிய லொறி ஒன்றை வாங்கவும் கருத்திற் கொள்ளப்பட்டது.

(i) (அ) மேற்குறித்த சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உற்பத்திப்பொருளினூடாக எவ்வகையான அடிப்படை மனிதத் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது ?

(ஆ) “அமரசுவை தயிர்” வணிகம் என்பது எவ்வகையான வணிக நிறுவன வகையில் அடங்கும் ?

(ii) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திப்பொருளின் விநியோக செயன்முறையை ஒரு பாய்ச்சல் வரைபடத்தைப் பயன்படுத்துவதனூடாகக் குறிப்பிடுக.

(iii) (அ) இவ்வணிகத்திற்காக நீர் பிரேரிக்கும் காப்புறுதி ஒப்பந்தமொன்றைக் குறிப்பிடுக.

(ஆ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைமுறைக் கணக்கைப் பேணும் ஒருவர் நடைமுறைக் கணக்கொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஓர் அனுகூலத்தை எழுதுக.

(iv) இவ்வணிகத்தை விரிவாக்கம் செய்வதற்குத் தேவையான லொறியை வாங்குவதற்கான நிதியைத் திரட்டிக் கொள்ளக்கூடிய **இரண்டு** முறைசார்ந்த முறைகளை எழுதுக.

(v) (அ) பெப்ரவரி மாதத்தில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகுகள் எத்தனை ?

(ஆ) பெப்ரவரி மாதத்தில் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை வருமானம் எவ்வளவு ?

(vi) 01.01.2015 இல் ஈடுபடுத்திய மூலதனத்திற்கான இரட்டைப்பதிவை எழுதுக.

(vii) (அ) இச்சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வங்கி நடைமுறைக் கணக்குடன் தொடர்புடைய **இரண்டு** கொடுக்கல்வாங்கல்களைத் தருக.

(ஆ) மேலே (அ) விலுள்ள கொடுக்கல்வாங்கல்களைப் பதிவதற்குரிய பொருத்தமான மூல ஆவணங்களை எழுதுக. (விடையளிப்பதற்கு பின்வரும் வடிவ மாதிரியைப் பயன்படுத்துக.)

| (அ) கொடுக்கல்வாங்கல் | (ஆ) மூல ஆவணம் |
|---|---|
| 1.<br>2. | 1.<br>2. |

[பக். 8 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



(viii) (அ) இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள வருமானச் செலவொன்றைத் தொகையுடன் எழுதுக.
(ஆ) இச்சம்பவத்தில் உள்ளடங்கியுள்ள மூலதனச் செலவொன்றைத் தொகையுடன் எழுதுக.

(ix) 2015 ஜனவரி மாதத்திற்கான இவ்வணிகத்தின் காசேட்டு வங்கி நிரலைத் தயாரிக்குக.

(x) 31.01.2015 இல் உள்ளவாறு "அமரசுவை தயிர்" வணிகத்தின் காசேட்டு மீதியைக் கணிப்பிடுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) தேவை, விருப்பம் ஆகியவற்றைத் தனித்தனியாக வரையறுக்குக. (02 புள்ளிகள்)

(ii) (அ) வணிக நிறுவனங்களை அவற்றின் உடைமை அடிப்படையில் வகைப்படுத்திக் காட்டுக.
(ஆ) உமது பிரதேசத்தில் காணப்படும் தபாற்கந்தோரானது மேற்குறிப்பிட்டவற்றுள் எவ்வகையான வணிக நிறுவன வகைக்குள் அடங்கும் ? (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.
(அ) வளங்களை அவற்றின் இயற்கையான வடிவத்திலேயே பயன்படுத்துதல் இரண்டாம் நிலை உற்பத்தியாகும்.
(ஆ) மரக்கறிச் செய்கையில் ஈடுபடும் விவசாயி அவற்றை, தானே நுகர்வோருக்குக் கொண்டுசென்று வழங்குவது ஒரு நேர் உற்பத்தியாகும்.
(இ) வணிகத் திட்டமானது எதிர்வுகூறப்பட்ட தகவல்களை உள்ளடக்கி இருக்கும்.
(ஈ) ஒரு கம்பனியானது கூட்டிணைக்கப்படுவதன் மூலம் சட்ட ஆளுமையைப் பெற்றுக்கொள்கிறது. (02 புள்ளிகள்)

(iv) ஜெயபாலன் என்பவர் பிரம்புக் கதிரைகளைத் தயாரித்து விற்பனை செய்ய உத்தேசிக்கின்றார். 2016 ஜனவரி மாதத்தில் 50 பிரம்புக் கதிரைகளைத் தயாரிக்க எதிர்பார்ப்பதுடன் அதற்குரிய பிரம்புகளுக்காக ரூ. 40 000 உம் மரவேலை செய்பவருக்கான மாதாந்த கூலியாக ரூ. 10 000 உம் மின்சார செலவினங்களாக மாதாந்தம் ரூ. 6 000 உம் மாதாந்த வாடகையாக ரூ. 4 000 உம் ஏற்படும் என மதிப்பிடப்பட்டது.
(அ) இவ்வணிகத்தில் எதிர்பார்க்கப்பட்ட நேர்க் கிரயம் மற்றும் நேரில் கிரயம் எவ்வளவு ?
(ஆ) கதிரை ஒன்றுக்கான எதிர்பார்க்கப்பட்ட உற்பத்திக் கிரயம் எவ்வளவு ? (02 புள்ளிகள்)

(v) சுமன் என்பவர் தனது நுகர்வுக்காக ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கைத் தனது பிரதேசத்திலுள்ள தீபா என்பவரின் மரக்கறிக் கடையில் வாங்கினார். தீபாவின் நண்பரான தனபாலன் வெலிமடையிலுள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்களிடம் இருந்து மிகவும் பாரிய அளவில் உருளைக்கிழங்குகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் தீபாவின் கடைக்கும் உருளைக்கிழங்குகள் வழங்குகின்றார்.
(அ) மேலுள்ள சம்பவத்தில் காணப்படும் **இரண்டு** இடைநடுவர்களைக் குறிப்பிடுக.
(ஆ) இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்குகள் மீதான இறக்குமதி வரியை அதிகரிப்பதானது வெலிமடையிலுள்ள உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் மீது எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதனைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**3.** (i) காசோலை என்றால் என்ன ? (02 புள்ளிகள்)

(ii) (அ) உமது பாடசாலையில் பயன்படுத்தப்படும் அக மற்றும் எழுத்து மூலமான தொடர்பாடல் முறைகள் **இரண்டை** எழுதுக.
(ஆ) வணிக நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்பாடல் முக்கியத்துவம் பெறுவதற்கான **இரண்டு** காரணங்களை எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) காசோலையில் இரண்டு சமாந்தரக் கோடுகளுக்கிடையே வணிக வங்கியொன்றின் பெயரை எழுதி, குறுக்குக்கோடிடுவது சிறப்புக் குறுக்குக்கோடிடல் எனப்படும்.
(ஆ) அடைவு வைக்கப்படும் நகைகள் மீது அடைவுபிடிப்பவர் காப்புறுதி செய்தகு நலனைக் கொண்டுள்ளார்.
(இ) நிறுவனமொன்றில் குறித்த சில ஊடகங்களைப் பயன்படுத்தி மக்களுக்கிடையே செய்திகள், தகவல்கள், எண்ணங்களைப் பரிமாற்றம் செய்தல் வெளிவாரித் தொடர்பாடல் ஆகும்.
(ஈ) கொழும்புத் துறைமுகமானது போக்குவரத்து மூலக்கூறுகளுள் ஒன்றான தரிப்பிடம் ஆகும். (02 புள்ளிகள்)

(iv) இசுறு என்பவர் தனது வணிகத்திற்காக கொள்வனவு செய்த மோட்டார் வாகனத்தை வரையறுத்த இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி செய்தார்.
(அ) இங்கு முறையே காப்புறுதி அளிப்பவர் காப்புறுதி செய்பவர் ஆகியோரைக் குறிப்பிடுக.
(ஆ) காப்புறுதிக்கும் ஆயுளுறுதிக்கும் இடையிலான வேறுபாட்டை எழுதுக. (02 புள்ளிகள்)

(v) பண்டார என்பவர் யாழ்ப்பாணத்திலிருந்து தொகையாக திராட்சைப் பழங்களைச் சேகரித்து அவற்றை புகையிரதத்தினூடாக கொழும்புக்கு எடுத்துவந்து, தனது சொந்த வாகனத்தின் மூலம் கொழும்பிலுள்ள பழக்கடைகளுக்கு விநியோகம் செய்கின்றார்.
(அ) இங்கு குறிப்பிடப்படும் போக்குவரத்துப் பாதைகளையும் அவற்றுக்கான ஊடகங்களையும் குறிப்பிடுக.
(ஆ) இங்கு குறிப்பிடப்பட்டவாறு யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்குத் திராட்சைப் பழங்களை எடுத்து வருவதில் தனது சொந்த வாகனத்தைப் பயன்படுத்தாமையினால் பண்டார பெற்றுக்கொள்ளக் கூடிய ஓர் அனுகூலத்தைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

[பக். 9 ஐப் பார்க்க

agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



Agaram.LK - Keep your dreams alive!

4. (i) முதலீட்டுக் கலவை என்றால் என்ன ? (02 புள்ளிகள்)
(ii) (அ) கூட்டுறவுச் சங்கம் ஒன்றிற்கான நிதியைத் திரட்டிக் கொள்ளக்கூடிய முறைகள் **இரண்டை** எழுதுக.
(ஆ) வணிக வங்கிகளின் **இரண்டு** வகையான வைப்புகளைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)
(iii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.
(அ) சாதாரண பங்குகளில் முதலீடு செய்யும் ஒருவருக்கு நிலையான பங்கிலாபங்கள் உரித்தாகும்.
(ஆ) கொழும்பு பங்குச்சந்தையின் நடவடிக்கைகள் இலங்கை பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.
(இ) முதலீட்டாளர் ஒருவர் சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்த விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கு விற்பனை செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளும் இலாபமானது மூலதன ஆதாயம் எனப்படும்.
(ஈ) ஏற்றுக்கொள்ளத்தக்க சட்ட அடிப்படையில் நிறுவனங்களால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் முறைசார்ந்த முதலீடுகள் எனப்படும். (02 புள்ளிகள்)
(iv) முதியவன் என்பவர் வாடகைக் கட்டடமொன்றில் அச்சகம் ஒன்றை நடாத்துகின்றார். இங்கு நான்கு ஊழியர்கள் பணியாற்றுவதுடன் அச்சு வேலைகளுக்காக நவீன அச்சு இயந்திரமொன்றை வாங்க முதியவன் உத்தேசிக்கின்றார்.
(அ) இவ்வணிகத்திற்கான குறுங்கால நிதித் தேவைப்பாடுகள் **இரண்டை** எழுதுக.
(ஆ) இந்நிறுவனத்தின் ஊழியரான ரஜீவன் இவ்வணிகத்தின் ஒரு பங்காளராக வருவதற்கு எண்ணுகின்றார். இதன் மூலம் வணிகத்தில் உருவாகக்கூடிய **இரண்டு** புதிய நிதி மூலங்களைத் தருக. (02 புள்ளிகள்)
(v) அமா, பபா ஆகிய இரு சகோதரிகளும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் கிடைத்த ரூ. 100 000 ஐ சமமாகப் பகிர்ந்து கொண்டதுடன் அவற்றை முறைசார்ந்த முதலீடுகளில் முதலீடு செய்தனர். ஓர் ஆண்டின் பின்னர் அமா மூலதன ஆதாயத்தைப் பெற்றுக் கொண்டதாகவும், பபா வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொண்டதாகவும் கூறினர்.
(அ) அமா முதலிட்டிருக்க முடியுமென நீர் கருதும் முதலீட்டு வகையைக் காரணத்துடன் எழுதுக.
(ஆ) பபா முதலிட்டிருக்க முடியுமென நீர் கருதும் முதலீட்டு வகையைக் காரணத்துடன் எழுதுக. (02 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## பகுதி II - கணக்கீடு

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

5. (i) பின்வருவன வியாபார நிறுவனமொன்றில் நிகழ்ந்த சில கொடுக்கல்வாங்கல்கள் ஆகும்.
(அ) உடைமையாளரால் ரூ. 50 000 மூலதனமாக ஈடுபடுத்தப்பட்டது.
(ஆ) பெற்றுக்கொண்ட வங்கிக்கடன் ரூ. 25 000 ஆகும்.
(இ) கடனுக்குக் கொள்வனவு செய்த பொருட்கள் ரூ. 15 000 ஆகும்.
(ஈ) மாதாந்த மின்சாரக் கட்டணம் செலுத்தப்பட்டது ரூ. 3 000 ஆகும்.
(உ) மொறட்டுவ தளபாட வியாபாரிகளிடமிருந்து கடனுக்கு ரூ. 100 000 இற்கு தளபாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

**வேண்டப்படுவது:**
மேலே தரப்பட்ட ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலுக்குமான மூல ஆவணம், வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கு, செலவு வைக்கப்பட வேண்டிய கணக்கு ஆகியவற்றைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்குப் பின்வரும் வடிவத்தைப் பயன்படுத்துக. முதலாவது கொடுக்கல்வாங்கல் உமக்காகச் செய்து காட்டப்பட்டுள்ளது.)

| கொடுக்கல்வாங்கல் | மூல ஆவணம் | வரவு வைக்கப்பட வேண்டிய கணக்கு | செலவு வைக்கப்பட வேண்டிய கணக்கு |
|---|---|---|---|
| (அ) | பற்றுச்சீட்டு | காசுக் கணக்கு | மூலதனக் கணக்கு |
| (ஆ) | | | |
| (இ) | | | |
| (ஈ) | | | |
| (உ) | | | |

(04 புள்ளிகள்)

(ii) குலம் வியாபாரிகளால் 31.03.2015 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி சமப்படவில்லை. வித்தியாசமாகக் காணப்பட்ட ரூ. 4 000 தொங்கற் கணக்கில் செலவு வைக்கப்பட்டது. பின்னர் பின்வரும் தவறுகள் கண்டுபிடிக்கப்பட்டன.
A - இரங்கனால் திருப்பி அனுப்பப்பட்ட சரக்குகள் ரூ. 1 000 பெறுமதியானவை உரிய இரண்டு கணக்குகளிலும் வரவுப் பக்கத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.
B - விற்பனைப் பட்டியல் ரூ. 8 000 ஆனது விற்பனை நாளேட்டில் ரூ. 800 எனப் பதிவு செய்யப்பட்டிருந்தது.
C - காப்புறுதிக் கட்டணமாகச் செலுத்திய ரூ. 2 400 காசேட்டில் மட்டுமே பதிவு செய்யப்பட்டிருந்தது.
D - பெற்ற வட்டி ரூ. 2 200 காசேட்டில் சரியாகப் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் கொடுத்த வட்டிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

**வேண்டப்படுவது:**
(அ) மேலேயுள்ள தவறுகளைத் திருத்துவதற்கான நாட்குறிப்புகள்
(ஆ) தொங்கற் கணக்கு (06 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

[பக். 10 ஐப் பார்க்க

www.agaram.lk



33621

**6.** (i) திலகம் விளையாட்டுக் கழகத்தின் 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு வருமாறு:

பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு

| | (ரூ.) | | (ரூ.) |
|---|---|---|---|
| 01.01.2014 இல் மீதி | 22 000 | விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு | 30 000 |
| பெற்ற அங்கத்துவக் கட்டணம் | 80 000 | செலுத்திய மின்சாரக் கட்டணம் | 6 000 |
| பெற்ற காசு நன்கொடை | 8 500 | இரும்பு அலுமாரி கொள்வனவு | 12 000 |
| | | மைதான பராமரிப்பு | 10 500 |
| | | 31.12.2014 இல் மீதி கீ.கொ.செ. | 52 000 |
| | 110 500 | | 110 500 |

மேலதிக தகவல்கள்:

※ திலகம் விளையாட்டுக் கழகத்தின் அங்கத்தவர்கள் எண்ணிக்கை 200 என்பதுடன் ஓர் அங்கத்தவருக்கான வருடாந்த அங்கத்துவக் கட்டணம் ரூ. 500 ஆகும்.

**வேண்டப்படுவது:**

(அ) 31.12.2014 இல் பெற வேண்டியுள்ள அங்கத்துவக் கட்டணம்

(ஆ) 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்காகத் தயாரிக்கப்படும் இவ்விளையாட்டுக் கழகத்தின் வருமானச் செலவுக் கணக்கில் உள்ளடக்கக்கூடிய **இரண்டு** செலவினங்களைப் பெயரிடுக.

(இ) இலாப நோக்கமற்ற நிறுவனங்களால் தயாரிக்கப்படும் 'பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கிற்கும்', 'வருமான செலவுக் கணக்கிற்கும்' இடையிலான வேறுபாடு ஒன்றை எழுதுக. (03 புள்ளிகள்)

(ii) அமலன் வணிகத்தின் 2015 செப்டெம்பர் மாதத்திற்கான காசேட்டின் வங்கி நிரல் கீழே தரப்படுகின்றது.

காசேடு

| திகதி | ப. இ. | விபரம் | பே ப. | தொகை ரூ. | திகதி | ப. இ. | விபரம் | பே ப. | தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/01 | | மீதி மு.கொ.வ | | 3 500 | 09/02 | | காசோலை - 153161 | | 2 000 |
| 09/03 | | காசு வைப்பு | | 6 000 | 09/08 | | காசோலை - 153162 | | 800 |
| 09/10 | | காசோலை வைப்பு | | 4 500 | 09/15 | | காசோலை - 153163 | | 3 400 |
| 09/18 | | காசோலை வைப்பு | | 6 400 | 09/20 | | காசோலை - 153164 | | 2 100 |
| 09/25 | | காசு வைப்பு | | 5 000 | 09/26 | | காசோலை - 153165 | | 1 500 |
| 09/28 | | காசோலை வைப்பு | | 1 800 | 09/30 | | மீதி கீ.கொ.செ | | 17 400 |
| | | | | 27 200 | | | | | 27 200 |

அமலன் வணிகத்திற்கு 2015 செப்டெம்பர் மாதத்திற்காக வங்கியினால் அனுப்பி வைக்கப்பட்ட வங்கிக்கூற்று வருமாறு:

| திகதி | விபரம் | கொடுப்பனவு (ரூ.) | பெறுவனவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 09/01 | மீதி முன் கொ.வ | – | – | 3 500 |
| 09/03 | காசு வைப்பு | – | 6 000 | 9 500 |
| 09/05 | செலுத்திய காசோலை - 153161 | 2 000 | – | 7 500 |
| 09/10 | செலுத்திய காசோலை - 153162 | 800 | – | 6 700 |
| 09/12 | காசோலை வைப்பு | – | 4 500 | 11 200 |
| 09/15 | கடன்பட்டோர் அனுப்புதல்கள் | – | 2 000 | 13 200 |
| 09/17 | செலுத்திய காசோலை - 153163 | 3 400 | – | 9 800 |
| 09/20 | காசோலை வைப்பு | – | 6 400 | 16 200 |
| 09/25 | காசு வைப்பு | – | 5 000 | 21 200 |
| 09/26 | செலுத்திய காசோலை - 153164 | 2 100 | – | 19 100 |
| 09/27 | வங்கிக் கட்டணங்கள் | 100 | – | 19 000 |
| 09/30 | நிலையியற் கட்டளை - காப்புறுதி | 4 200 | – | 14 800 |

**வேண்டப்படுவது:**

(அ) சீராக்கிய காசேடு

(ஆ) வங்கிக் கணக்கு இணக்கக் கூற்று (07 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

agaram.lk

[பக். 11 ஐப் பார்க்க

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk



7. தர்சன் வியாபாரிகளின் 31.12.2014 இல் உள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்படுகின்றது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| மூலதனம் ......................................... | | 500 000 |
| 01.01.2014 இல் சரக்கிருப்பு ......................... | 30 000 | |
| கொள்வனவுகள் ..................................... | 300 000 | |
| விற்பனைகள் ....................................... | | 450 000 |
| கடன்பட்டோர்....................................... | 45 000 | |
| கடன்கொடுத்தோர்.................................... | | 20 000 |
| வங்கிக் கடன் 10% ................................ | | 50 000 |
| காணி, கட்டடங்கள் (கிரயத்தில்)........................ | 400 000 | |
| இயந்திரங்கள் (கிரயத்தில்) ........................... | 120 000 | |
| மின்சாரக் கட்டணங்கள் .............................. | 12 000 | |
| நிர்வாகச் சம்பளங்கள் ............................... | 30 000 | |
| பற்று ............................................. | 5 000 | |
| விளம்பரக் கட்டணங்கள் .............................. | 10 000 | |
| விநியோகச் செலவுகள் .............................. | 12 000 | |
| வங்கிக் கடன் வட்டி.................................. | 4 000 | |
| கையிலுள்ள காசு ................................... | 52 000 | |
| | 1 020 000 | 1 020 000 |

மேலதிக தகவல்கள்:

- ❋ 31.12.2014 இல் உள்ள சரக்கிருப்புகளின் கிரயம் ரூ. 12 500 ஆகும்.
- ❋ இயந்திரங்கள் வருடாந்தம் நேர்கோட்டு முறையில் 10% பெறுமானத்தேய்வு செய்யப்படல் வேண்டும்.
- ❋ கடன்பட்டோரில் ரூ. 1 000 அறவிடமுடியாக்கடனாகப் பதிவழிக்கப்படல் வேண்டும்.

**வேண்டப்படுவது:**

(i) 31.12.2014 இல் முடிவடைந்த ஆண்டுக்கான தர்சனின் வியாபார இலாப நட்டக் கணக்கு (05 புள்ளிகள்)

(ii) 31.12.2014 இல் உள்ளவாறான ஐந்தொகை (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

* * *

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

www.agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

agaram.lk